# செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண்.50/2024** **நாள் : 08.07.2024**

## தொழில் முனைவோர்களாக தேர்வு செய்யப்பட்டுள்ள தூய்மை பணியாளர்களுக்கு நவீன இயந்திரங்களை கையாளுவதற்கான பயிற்சி முகாம்

**சென்னைக் குடிநீர் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர்.டி.ஜி.வினய், இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்தார்**

தொழில் முனைவோர்களாக தேர்வு செய்யப்பட்டுள்ள தூய்மை பணியாளர்களுக்கு நவீன இயந்திரங்களை கையாளுவதற்கான பயிற்சி முகாமினை 08.07.2024 அன்று கீழ்பாக்கத்தில் உள்ள குடிநீர் வாரியத்தின் பயிற்சி மையத்தில் சென்னைக் குடிநீர் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர்.டி.ஜி.வினய், இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்தார்.

இம்முகாமினை தொடங்கி வைத்து மேலாண்மை இயக்குநர் அவர்கள் தெரிவித்தாவது.,

தூய்மை பணியாளர்களை தொழில் முனைவோர்களாக மாற்றும் உன்னதமான முயற்சிக்கான வழிகாட்டுதலில், தலித் இந்திய வர்த்தக மற்றும் தொழிற்சங்கத்துடன் (DICCI) ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கடந்த 28.02.2023 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டது. அதனை தொடர்ந்து, மாண்புமிகு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்களின் அறிவுறுத்தலின் படி, இறந்த தூய்மை பணியாளர்களின் வாரிசுதாரர்கள், தூய்மை பணியாளர்கள், சமூக பொருளாதார நிலையினை மேம்படுத்திடவும் தகுதியானவர்களை கண்டறிந்து அவர்களை தொழில் முனைவோர்களாக

மாற்றுவதற்கு தேவையான தொழில் நுட்ப உதவிகள் வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 08.03.2024 அன்று தூய்மைப் பணியாளர்களை தொழில்முனைவோர்களாக மாற்றுவதற்கான உன்னத நோக்கத்தின் அடிப்படையில் 213 தூய்மைப் பணியாளர்களுக்கு நவீன கழிவுநீர் அகற்றும் ஊர்திக்கான கடனுதவிக்கான ஆணைகளை வழங்கினார்கள். இதனை தொடர்ந்து சென்னைக் குடிநீர் வாரியம் தொழில் முனைவோர்களாக தேர்வு செய்யப்பட்டுள்ள தூய்மை பணியாளர்கள் நவீன இயந்திரங்கள் கொண்டு கழிவுநீர் அகற்றும் பணிகளை மேற்கொள்வதற்காக ஒப்பந்த புள்ளிகள் கோரியது. ஒப்பந்த புள்ளிகள் பெறப்பட்டதன் அடிப்படையில் 7 வருடங்களுக்கு கழிவுநீர் அகற்றும் பணிகளை மேற்கொள்வதற்காக ரூ.524 கோடி இறுதி செய்யப்பட்டுள்ளது. 2KL கொள்ளளவு கொண்ட வாகனத்திற்கு ஒரு மீட்டருக்கு ரூ.17.60 எனவும், 6KL கொள்ளளவு கொண்ட வாகனத்திற்கு ஒரு மீட்டருக்கு ரூ.20.70 எனவும் இறுதி செய்யப்பட்டு பணி ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது.

1. **சென்னைக் குடிநீர் வாரியம்**

| பகுதிகள் | 2000 கிலோ லிட்டர் கொள்ளவு கொண்ட வாகனம் | 6000 கிலோ லிட்டர் கொள்ளவு கொண்ட வாகனம் |
|---|---|---|
| 5 | 24 | 21 |
| 6 | 22 | 18 |
| 9 | 18 | 28 |
| 10 | 16 | 32 |
| **மொத்தம்** | 80 | 99 |

2. நகராட்சி நிருவாக இயக்குநரகம்

| மாநகராட்சிகள் / நகராட்சி / பேரூராட்சிகள் | 2000 கிலோ லிட்டர் கொள்ளவு கொண்ட வாகனம் | 6000 கிலோ லிட்டர் கொள்ளவு கொண்ட வாகனம் |
|---|---|---|
| ஆவடி | - | 8 |
| தாம்பரம் | - | 21 |
| மறைமலைநகர் (நகராட்சி) | - | 3 |
| ஸ்ரீபெரும்பூதூர் | | 1 |
| திருமழிசை | | 1 |
| **மொத்தம்** | 80 | 133 |

2KL – 80 வாகனங்கள், 6KL – 133 வாகனங்கள் என மொத்தம் = 213 வாகனங்களுக்கு பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

தொழில் முனைவோர்களாக தேர்வு செய்யப்பட்டு உரிய பயிற்சிகள் வழங்கப்பட்டு பணிகளை மேற்கொள்ளவுள்ள தூய்மை பணியாளர் தாங்கள் மேற்கொள்ளும் பணிகளை சிறப்பாக மேற்கொள்ள வேண்டும். தூய்மை பணியாளர்களின் சமூக பொருளாதார மேம்பாட்டின் கருத்தினை கொண்டு தமிழ்நாடு அரசு இதுபோன்ற நடவடிக்கைகளை எடுத்துள்ளது. தூய்மை பணியாளர்களின் வாழ்வதாரத்தை மேம்படுத்துவோடு, பாதுகாப்பாக பணிகளை மேற்கொள்ளுவதற்கும் இத்திட்டம் உறுதுணையாக இருக்கும் என மேலாண்மை இயக்குநர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் DICCI யின் தேசிய தலைவர் பத்மஸ்ரீ திரு.ரவிக்குமார் நர்ரா, DICCI யின் தென் இந்திய தலைவர் திரு.சௌந்தர் ராஜன், சென்னைக் குடிநீர் வாரிய பொறியியல் இயக்குநர் திரு.மி.ஜெய்கர் ஜேசுதாஸ், தலைமை பொறியாளர் திரு.இரா.சிவமுருகன் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்,
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்
கழிவு நீரகற்று வாரியம்

சென்னை குடிநீர் வாரியத்தின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள
CHN_Metro_Water CMWSSB chennaimetrowater